**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**
அசல் வழக்கு எண். 153/2022

நாள்: 23.10.2025

பெயர்: கலியபெருமாள் (வா.சா.2) த/பெ: பூமாலை

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி...**

1. எனக்கு ராமலிங்கம் மற்றும் வாதிகளும் உறவினர்கள் என்றால் சரிதான். அனைவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. அதில் மருதாயி மட்டும் உள்ளூரில் உள்ளார். அதில் அஞ்சலை மற்றும் சின்னபிள்ளை 40 ஆண்டு காலமாக வெளியூரில் உள்ளார்கள். எத்தனை சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் இரண்டு மனை என்று தெரியும். மற்றவை தெரியாது. ராமலிங்கம் பழனியம்மாளுக்கு அவர் குடியிருந்த வீட்டை கிரையம் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பூர்வீக சொத்து என்றால் என்னவென எனக்கு தெரியாது. வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அந்த இரண்டு மனைக்காக தாக்கல் செய்துள்ளார். அந்த இரண்டு மனையும் காலிமனையா என்றால் வீடு உள்ளது. அந்த குடியிருக்கும் மனை நத்தமா என்றால் மேற்கு உள்ள மனை மட்டும் நத்தம் அதில் ராமலிங்கம் குடியிருக்கிறார். இன்னொரு மனையில் மருதாயி குடியிருந்து வருகிறார். அது இரண்டுமே பூர்வீக மனையாகும். இந்த இரண்டுமே பூர்வீக இடம் இல்லை என்றும் நத்தம் என்றும் அவர் சொந்தமாக வாங்கியது என்றும் எனவே வாதி கூறியபடி அவருக்கு பாகம் கிடைக்காது என்று சொன்னால் சரியல்ல. என்னை சாட்சியம் சொல்ல அழைத்து வந்த காரணத்தினால் அவர்களுக்கு ஆதராவாக சாட்சியம் கூறிகிறேன் என்று சொன்னால் சரியல்ல. சின்னபிள்ளை எங்கே குடியிருக்கிறார் என்றால் உள்ளூரில் குடியுள்ளார்.

ஒப்பம்/– கலியபெருமாள்
திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி,
என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து
காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு
கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/– S.தனலெட்சுமி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.